அறப்போர்

49

முகருணாநிதி

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

அறிவுப் பண்ணை

1949

அறப்போர்



மு. கருணாநிதி — பேச்சு.

விலை அணா மூன்று.

அறிவுப்பண்ணை,
6, மங்கம்மாள் தெரு, (மிண்ட்போஸ்ட்)
சென்னை. 1.

இரண்டாம்பதிப்பு ஏப்ரல் 1949

அச்சிட்டோர் :

மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ்,

சென்னை - 1.

அறப்போர்

போராட்டம் தொடங்கிவிட்டோம், தோழர்களே போராட்டம் தொடங்கிவிட்டோம். புரட்சியின்வேகம் உணராது—புகையும் எரிமலையை புன்னகை அருவியென எண்ணிடும் பொட்டைக் கருத்தினரை எதிர்த்து-போடுங்கள் மஞ்சள்பெட்டியில் வோட்டுகளை, பூரிப்பு பொங்கிடும் உங்கள் வாழ்வினிலே என்று பேசி. இன்று பொத்தல் ஆட்சி நடத்தும் அன்பர்களை எதிர்த்து—மொழியும் கலையும் வாழும் முழு சுதந்திரம் தவழும் என்று வாய்ப் பறைசாற்றி தமிழையே தரைமட்டமாக்கப் புறப்பட்ட வந்தேமாதர வீரர்களை எதிர்த்து—ஆட்சிபீடத்தில் ஏறியதும் அதிகார போதையில் அடக்குமுறைகளை அள்ளி அள்ளி வீசிடும் ஆணவ ஆட்சியாளரை எதிர்த்து—போராட்டம் தொடங்கிவிட்டோம் தோழர்களே! போராட்டம் தொடங்கிவிட்டோம்.

"வாழ்வு சாவு" இரண்டிலொன்றை வரவேற்பது என்ற வைர நெஞ்சத்துடன் களத்தில் குதித்திருக்கிற நாம் அவசரப்பட்டோ, ஆத்திர உணர்ச்சிக்கு அடிமைப்பட்டோ, அவசியமில்லாமலோ போர்ப்பரணிபாடவில்லை. மாநாடுகூட்டி, மன்றுடிக்கேட்டு, மறைமலையடிகளாரை, மாத் தமிழர் திரு. வி. கலை, மறத் தமிழர் சிவஞானத்தை மாற்றுக் கட்சியினர் தமிழறிவை—மதிரிகளுக்குக்காட்டி எதற்கும் இணங்காத இறுமாப்பான நிலை ஆளவந்தார்க்கு என்று அறிந்த பின்னரே போர்! போர்!! போர்!!! என்றோம்; போர் மூண்டேவிட்டது. சமருக்குமுன் சந்திப்பு நடத்திறோம். பெரியார்—பிரதமர் பேட்டி நடந்தது. யுத்த தர்மத்தில் ஒரு சிறிதும் நழுவவிடவில்லை. களத்திலே காளையரை—கன்னியரை—கல்லரையாகவுந் துணிந்த வீரர்களை—களப்பலியாக எங்கள் அருமை அண்ணலை நிறுத்தியிருக்கிற நாங்கள்—

போர் நிலையுணர்த்தும் நோக்குடன், போரின் அவசரத்தை புரிந்துகொள்ளாத பொது மக்கட்கு விளக்கம் தரும் விருப்புடன், போர் நடத்துபவர் பொல்லாதவர் என பொய்யுரை திரிக்கும் பொக்கிகட்கு பதில் கூறும் ஆசை யில் இங்கு நிற்கிறோம். பொது மக்களே! போர் மூள்வ தற்கு காரல் கோல் வீழா நடத்தியவர் காங்கிரஸ் அமைச் சர்கள் என்பதை யார் மறுக்கமுடியும்? சட்டமும்—அதி காரமும் தங்கள் கையில் என்ற தைரியத்தில் அவர்களை எம் மீது ஏவிய கணைகள் கொஞ்சமா? அந்தக் கணைகளை பெரியார் ஆணைப்படி இதுவரை கேடயம் கொண்டு தடுத்துப்பார்த்தோம். கேடயமும் உடைந்தது, கணைகள் எம் விலா எலும்புகளையும் நொறுக்குகிற அளவுக்கு— எங்கள் நிலைமை நெருக்கடியாகிவிட்டது. ஆகவேதான் போராட்டம் தொடங்கிவிட்டோம் என முரசொலித் தோம். எதிர்க்கத் தொடங்கியிருக்கிற நாங்கள் வேல், வில் ஈட்டிகொண்டு எதிர்க்கவில்லை. ஒடிந்த விலா எலும்பை வீசியெறிந்து எதிர்க்கிறோம். ஆம்—அறப்போர் நடத்துகிறோம்.

ஆட்சி அவர்கள் கையில் ஏறியவுடன் எய்த முதல் கணை தோழர் C. P. சின்னராசு தீட்டிய போர்வாள் நாடகத் தடையுத்திரவு. அந்த நாடகத்திலே என்ன குற்றம் கண்டார்கள். போர்வாள் நாடகத்தில் குஷ்ட ரோகிப் புருஷனைக் கோமளாங்கியின் வீட்டுக்குத் தூக்கிச் சென்ற நளாயினி கதை இருக்கிறதா? வாழை மட்டையைவைத்து அடுப்பெரித்தாள் என்ற பொய் மூட்டை நல்ல தங்காள் புராணம் இருக்கிறதா? குளத் திலே நீராடிய பெண்களின் சேலையைத்திருடி மரத்திலே அமர்ந்து குழலூதிக் கும்மாளம்போட்ட கோபால கிருஷ்ணனின் கோணல் நடத்தை இருக்கிறதா? மகா விஷ்ணுவை மாயாமோகினியாக்கி அந்த ஆணைப் புணர்ந்து அய்யனுரைப் பெற்ற மகேஸ்வரனின் மானங்கெட்ட வர லாறு இருக்கிறதே?

சிந்திக்கச் சொன்னது சின்னராசின் போர்வாள் என்பதற்காக அதற்குத் தடையா? அடுக்குமா இது ஆட்சியாளரே என்று கேட்டோம். ஆட்சியாளர் மௌன

னம் சாதித்தனர். போர்வாளுக்குத்தடை, அறிவுக்குத் தடை பெரியாரே என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டோம். பொறுமனமே பொறு என்றார் பெரியார்; பொறுத்தோம்.

அடுத்து—இல்லாத கறுப்புச் சட்டைப்படையை இருப்பதாக நினைத்து கறுப்பு சட்டைப்படை தடை யுத்தரவு தாண்டவமாடிற்று. அமைச்சர் ஓமந்தூரார், ஆற்காடு ராமசாமி, அறிஞர் சண்முகம் அன்பர் காமராஜ், அடிக்கடி கட்சி மாறும் சுப்பராயன் அத்தனைபேரும் ஆரிய அகராதியில் சூத்திரர்கள். இந்த அவல நிலையை அழிக்கத்தானே நாங்கள் கறுப்புடை அணிந்தோம். அதற்குமா மறுப்பு மந்திரியாரே? என மனமுருகிக் கேட்டோம்.

கறுப்புச்சட்டைப்படையென ஒரு ராணுவ அமைப்பு இல்லையாமே—அது எந்த பலாத்கார நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லையாமே—இப்படியெல்லாம் திராவிடகழகத் தலைவர் ஈ. வே. ராமசாமி அவர்கள் அறிக்கை விடுத்திருக்கிறாரே—பிறகு ஏன் தடை விதித்தீர்?

இம்மாதிரி சரமாரியான கேள்விகள் சட்ட சபையில் கேட்கப்பட்டன. மந்திரிமாரில் ஒருவர் முத்தான வாய்திறந்தார். பதில் சொல்வார் என எதிர்பார்த்தோம்.

தடை யுத்தரவுக்குக் காரணம் "தெரியாது" என திருவாய்மலர்ந்தருளினர். அவர் இப்போது மாஜி மந்திரி. அந்த கேலிச் சித்திரத்தைக்கண்டு மகிழவா எமக்கு நேரம்? மனம் புண்ணாயிற்று. பெரியாரே! இதற்கு வழி என்ன என்று ஈரோடு நோக்கி உரத்த குரல் எழுப்பினோம். பொறுமனமே பொறு என்றார். அப்போதும் பொறுத்தோம். போர் துவங்கவில்லை. பின்னர்,

'விடுதலை'க்கு 2000-ரூபாய் ஜாமீன் கோரியது ஆட்சி பீடம். காரணம் கேட்டோம் கனல்கக்கும் கண்களுடன். காரணமா கிடைக்கும் இந்த கேட்பாராற்ற ராஜ்யத்தில்! 'விடுதலை' செய்த தவறென்ன? உலக உத்தமர் காந்தியைக் கொன்றது ஒரு பார்ப்பான் என்ற உண்மையை உரைத்தது

குற்றமா? பெரியார் ராமசாமியின் பெரன் மொழிகளை திராவிடத்திற்குத் தந்தது குற்றமா? அரசியலில் குட்டை குழப்புவோரை சமுதாயத்தில் குறும்புத்தனம் செய்வோரைத் தன் குத்தூசியால் குத்திக் திருத்தியது குற்றமா? காமத்தை வாரியிறைக்கும் ஏடுகள், வாலிபரை வசீகரித்து வாழ்வை விழலாக்கும் இதழ்கள், இவைகளெல்லாம் அமைச்சரின் கண்களில் படாததேனே? இந்தக் கேள்வியை கொஞ்சம் அழுத்தந் திருத்தமாக—ஆவேசமாகக் கேட்டுவிட்டு பெரியார்பக்கம் திரும்பினேம். அவர் என்ன சொல்கிறார் எனக்கேட்க. பொறுமனமே பொறு என்ற அமைதி ஒலியே அங்கும் எழுந்தது. அடங்கினேம், அமைதி பெற்றோம், அப்போதும் போர்நாள் குறிக்கவில்லை.

பிறகு, குன்றெடுக்கும் பெருந்தோளான்-கொடை கொடுக்கும் கையான்-சூள்ளாரிச்செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்-என் தமிழர் மூதாதை! என் தமிழர் பெருமான்! வஞ்சக விபீஷணனின் அண்ணனென்று தன்னை வையத்தார் சொல்லுமொருமா பழிக்கே அஞ்சும் நெஞ்சகன், நல்யாழின் நரம்புதனைத் தடவி நிறைய இசைச்செவியமுது தரும் புலவன், வெஞ்சமரில் சாதல்வர நேரிடினும் சூழ்ச்சி விரும்பாத பெருந்தகை, தென்னிலங்கை வேந்தன் இராவணன். அவன் சிறப்பைப்பற்றி திரு புலவர், V. S. குழந்தை ஒருகாவியம் புனைந்தார். இராவணகாவியம். ஆம் புதுமைச்சோலை. அந்தச் சோலைக்குத் தீயிட்டனர் செங்கோலேந்திகள். இராவண காவியத்திற்குத் தடைபோட்டது. "விற்காதே—வாங்காதே" என சத்தமிட்டது சர்க்காரின் சட்டம். இராவணகாவியம் ஏன் பறிமுதலாக வேண்டும் என்று நாங்கள் நினைக்காமலிருக்க முடியுமா? நினைக்கிற நேரத்தில் எங்கள் நெஞ்சு நெருப்பாக மாறுமல்தானிருக்க முடியுமா? ஓமந்தூராரை அழைத்துக்கொண்டு கம்பராமாயணச் சோலையிலே வந்தோம், அங்கே பூத்துக்குலுங்கியிருந்த மலர்களில் பூநாகங்கள் நெளிவதை அவருக்குக் காட்டினேம். நாமம் போட்டிருப்பது ராமனல்ல.....நம்மினத்தைக் கடிக்கவந்த நல்ல பாம்பு என எச்சரித்தோம். அதோ சலசலென ஓடுவது

ரோடையல்ல.....நம் கலிவளத்தை நாசமாக்கும் விஷ வாய்க்கால் என விளக்கினேம். அத்தோடுவிட்டோமா? மிதுலாபுரியை காட்டினேம். மிதுலையின் மாளிகையில் ஜனகன் மகள் ஜானகியைக் காட்டினேம். வில்லொடித்து சீதையை விவாகம் செய்ய விசுவாமித்திரனுடன் வரும் ஸ்ரீ ராமனைக் காட்டினேம். சீதையின் கண்களும், ராமன் கண்களும் பின்னிக்கொண்ட காட்சியை காட்டினேம். ராமனின் தரிசனத்தால் புளகாங்கிதமுற்று—பூரிப்பு தாங்க முடியாமல்—பொங்கி நின்ற பூமாதா சீதாதேவியைப்பற்றி கம்பர் பாடிய பாடலைக் காட்டினேம். அந்தப் பாடலிலே மகிழ்ச்சி தாங்கமுடியாமல் சீதையின் மறைவிடம் திடீரென விம்மியதையும்-அதனால்மேகலாபரணம் அறுந்து விழுந்ததையும் கம்பர் வர்ணித்திருக்கிற பாங்கை படித்துக் காட்டினேம். மகாலட்சுமி அவதாரத்திற்கு "வாமமேகலையிற் வளர்ந்தது அல்குலே" என்று மட்டரக வர்ணனை தந்த கம்பனின் கேவல புத்தியைக் காட்டினேம் இந்த ஆபாச ராமாயணத்துக்கு தடைபோட தைரியமற்ற சர்க்காரே! நீ எங்கள் ராவணகாவியத்துக்கு தடை போட்டது நியாயமா? நேர்மையா? நாணயமா? என்று கேட்டோம். கண்களிலே ரத்தம் தெரிக்க—அந்த ரத்தத்திலே ரோஷம் கொப்பளிக்க கர்ச்சனை புரிந்த நாங்கள் ஈரோடு நோக்கினேம். பொறுமனமே.....பொறு என்றார் பெரியார் ராமசாமி. போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அதற்குப்பின் திராவிடர் நெஞ்சத்தைப் பிளக்கும் திடுக்கிடும் செய்தி கேட்டோம். எங்கள் தாயின் கழுத்தை நெறிக்கும் காட்சி கண்டோம். இந்தி நுழைந்தது இந்தி! இதையும் பொறுக்கமுடியுமா? பெரியாரே இனிப் பொறுக்கமுடியாது. வீரர்கள் நாங்கள் வெகுளிகள் அல்ல. எங்கே போர்க்கட்டுனா எனத் துணிச்சலாக கேள்விகிளப்பினேம், அப்போதும் பொறுமனமே பொறு என்றார் அந்தப் பொல்லாத கிழவர். எங்கள் துடிப்பு எங்களாலேயேஅடக்கமுடியாத சக்தி பெற்றது, மாநாடு நடத்தினர். மாத்தமிழர் உள்ளத்தைப் படம்பிடித்து மதோன்மத்தருக்குத் தெரிவித்தார். மனம் இரங்கிற்று

மந்திரிகட்கு. எங்கே உத்திரவு இடுங்களையா என அதட்டிப்பேசினேனும். எம் தலைவரே! பெரியாரே! எங்கள் அழுத்தமான எண்ணத்திலே—மூறுக்கேறிய நரம்புகளிலே—சூடேறிச் சுழன்றோடும் ரத்தத்திலே—தினவெடுக்கும் தோள்களிலே—கனல்பொழியும் கண்களிலே தங்கட்கு நம்பிக்கையில்லையா? நாங்கள் சாவதற்கு அஞ்சும் சமூகத்தினரா? சண்டைக்கு ஓளியும் மரபினரா? பாண்டியன் பரம்பரை ஆயிற்றே! சேரன் சந்ததியாயிற்றே! சோழனின் சொந்தக்காரராயிற்றே? சொல்லுங்கள் அய்யா சொல்லுங்கள் போர் என்று சொல்லுங்கள், பொக்கை வாயைத்திறந்து அந்தப் பொன்மொழியைச் சொல்லுங்கள். தித்திக்கும் அந்த தீரக்குரலை எம்மிடம் நீட்டுங்கள்.....எங்கே?...எங்கே?...என, எரிமலைகளாய் நின்ற நாங்கள் கெஞ்சினேனும். அய்யா வாயசைத்தார். அவர் வெண்தாடி அசைந்தால் போதுமே எங்களுக்கு. ஆகஸ்ட் பத்தில் போர் என்றார் அண்ணை சர்வாதிகாரி என்றார். போராட்டம் தொடங்கிவிட்டோம் தோழர்களே போராட்டம் தொடங்கிவிட்டோம்.

போரின் முதற்குறி—முதல் தாக்குதல்—இந்திக் கோட்டையைத் தவிடுபொடியாக்குவது பிறகு மார்வாடிகள் என்ற மாகிளுட் அரண்களை மண்மேடாக்குவது. திராவிடத் தனியாட்சி மலரும்வரை நம் தோள்களுக்கு ஓய்வில்லை. அதுவரை போர்! போரேதான். அதற்காக... நாங்கள் வீட்டில் விடைபெற்று களத்தில் நிற்கும் வேளையில்.....விஷக்கோப்பைகளுடன் வேதரத்தினங்கள் உங்கள் முன் விஜயம் செய்கின்றனர். அவர்கள் நாக்கிலும் விஷம்.....கையிலும் விஷம்.....அது உங்கள் நரம்பில் ஏற்றப்படுவதற்காக! இந்த வேதனை தரும் நிலையைப் போக்க—விஷம், வேதரத்தினங்களின் ரூபமாக வருவதை எச்சரிக்க—நாங்கள் களத்திலிருந்தபடியே உங்களைக் காணவேண்டியிருக்கிறது. இந்தி தென்னாட்டுக்கு இறக்குமதியாகிறது என்றதும் கல்விமந்திரியார் கூறினார் கர்னாடகம் முதலிய பகுதிகளில் கட்டாயபாடம்; தமிழ் நாட்டில் இஷ்டபாடம் என்று! 1938, அவினாசியாரோடு பேசியிருக்கிறது என நினைத்தோம். தாளமுத்து நடரா

ஐன் கல்லறைகளைக் காட்டியிருக்கிறது என எண்ணி னேம். அன்றி அணிவகுத்த ஆயிரமாயிரம் வீரர்களின படைவரிசையை வர்ணித்திருக்கிறது என மகிழ்ந்தோம். திடீரென இந்துவும் மித்திரனும் உருவிய பூணூலைக்கண்டு வெலவெலத்து விடுவார் அவிநாசி என நாம் எதிர்பார்க்கத் தானில்லை. அந்த வஞ்சகப் பஞ்சணையிலே—வரதாச்சாரி வர்க்கம் விரித்தவலையிலே தலைகுப்புற வீழ்ந்தார். தமிழ் அழிக்கத்துணிந்தார். தமிழ் அழிக்கத்துணிந்தார். தகாத செயல் இதுவென நாம் எடுத்துரைத்தும், எச்சரித்தும் ஆச்சாரியாரின் செவியையே அமைச்சர் பெற்றிருந்தார். கட்டாயமாக இந்தியைத் திணித்திருப்பவர் நாம் களம்புகுகாதை நடத்தியதும் இந்தி கட்டாயமல்ல; இஷ்டபாடந்தான் என சுற்றிசுற்றி சூருவளிப்பிரச்சாரம் செய்கிறார். பதவி நிலைக்கப் பணிபுரியும் சர்தார் வேதரத்தனமும் அதற்கு சப்பைக்கட்டு கட்டுகிறார். இந்தி இஷ்டபாடந்தானும் அவர்கள் கிளப்பும் புதுரக விஷப்புகை. கட்டாயபாடம் என்று முழக்கியவாயால்—இந்தியைக் கட்டாயமாகத் திணித்து விட்டு—இது இஷ்ட பாடந்தான் என்று விளக்கம் கூறும் நிலை ஏற்பட்டிருக் கிறது. இதுவே நமக்கு போரில் முதல் வெற்றி.

"ஆங்கிலத்தை மூன்றுவது மொழியாக்கிவிட்டோம் தமிழை முதல் மோழியாக்கிவிட்டோம் இந்தி கட்டாயமல்ல, இரண்டாம் மொழிக்குழுதான் கட்டாயம். இரண்டாம் மொழிக்குழுவில் கன்னட முண்டு, களிதெலுங்குண்டு, கவின்மலையாளமுண்டு. பார்சியுண்டு, சமஸ்கிரதமுண்டு, இந்தியுமுண்டு. இதில் ஏதாவதொன்றைத்தான் கட்டாயமாகப் படிக்கவேண்டும். ஆகவே இந்தி கட்டாயமல்ல" இது அந்த விஷமிகளின் விபரீத வாதம். நாங்கள் சொல்லுகி றோம். சட்டப்படி இந்தி இஷ்டபாடந்தான். ஆனல் நடை முறைப்படி இந்தி கட்டாயபாடமாக்கப் பட்டிருக் கிறது.

அழகான ஒரு வாலிபன். அரும்புமீசையுடையோன். அவனுக்கு மணந்துகொள்ள ஒரு பெண் தேவை. அதற்

காக ஒரு தரகனை அழைக்கிறான். ஆவலை வெளியிடுகிறான். தரகன் பெண் தேடிப்புறப்படுகிறான். நாலைந்து பெண்கள் கொண்டுவரப்படுகிறார்கள். வாலிபன் அவர்களில் ஒருத்தியைப் பொறுக்கவேண்டும். வரிசையாக அந்த வனிதையர் நிறுத்தப்படுகின்றனர். அதில் நாலு பேர் நல்ல அழகிகள். "நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்" என்ற பாரதிதாசனின் பாட்டுக்கு ஏற்ப குடும்பம் நடத்தும் குணத்தினர். விவரிப்பானேன், அவர்கள் குளிர்தென்றல்கள். ஆனால், அந்த அழகிகள் அலங்கோலப்படுத்தப்பட்டுள்ளனர்.

நீண்டுவளர்ந்த அவர்கள் கூந்தல் குறுக்கும் நெடுக்குமாய் வெட்டப்பட்டு கோரமாக்கப்பட்டுள்ளது. தங்க நிறமேனியிலே தார் பூசப்பட்டிருக்கிறது, ரோஜாக் கன்னங்களில் கருங்கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. கந்தலாடைக்காரிகளாய் நிற்கின்றனர், அந்தக் கன்னிகள்.

ஐந்தாவதாய் ஒருத்தி. அவள் விபசாரி. தன்னை அந்த வாலிபனுக்கு கட்டிவைத்தால் தரகனுக்கு நிறைய பணம் தருவதாக வாக்களித்திருக்கிறவள். விபசாரத்தால் ஏற்பட்ட முக விகாரத்தை மறைக்க அவளுக்கு "குட்டிகூரா" பவுடர். தொழிவின் காரணமாய் குழி விழுந்த அவள் கன்னத்தை மறைக்க "கூலிங் கிளாஸ்" கண்ணுடி. சொறிபிடித்த மேனியை மறைக்க சொக்குப் பச்சை சில்க் புடவை. மூடைநாற்ற மெடுக்கும் அவள் கூந்தலில் முல்லைமலர்கொத்து. ஆடம்பரத்தால் ஆட வரை வசீகரிக்க அவள் கையிலே சுழன்று கொண்டிருக்கும் கைக்குட்டை.

இந்த நிலையில் கல்யாணத்திற்கு தவிக்கும் அந்தக் காளை யாரைத்தேர்ந்தெடுப்பான்?

விபசாரியைத்தானே—அவன் விவாகத்திற்கு ஏற்பாடுசெய்வான். ஏன் நீங்களும் நானும்கூட ஏமாந்து போய்விடமாட்டோமா? இதே முறையில்தான் இந்த விபசாரி இத் தமிழகத்தில் கோண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறாள்.

இந்தி படிக்க வசதியுண்டு—விபசாரிக்கு விதவித அலங்காரம் இருப்பதுபோல! இந்திக்கு பள்ளியில் ஆசிரியர் பலர் உண்டு—விபசாரிக்கு சில்க் சேலை கட்டியிருப்பது போல! இந்திக்கு பண உதவி தாராளமாய் உண்டு—விபசாரிக்கு முல்லைமலர் சூட்டியிருப்பதுபோல!

ஆனால்.....தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளுக்கு ஆசிரியர்கள் கிடையாது — அதாவது அழகானபெண்களுக்கு அலங்காரங்கள் இல்லாததுபோல! மற்ற மொழிகளுக்கு பண வசதி கிடையாது—மலர்முக வதிகளுக்கு நல்ல சேலையில்லாததுபோல! விபசாரி ஸ்தானத்தில் இந்தியும். அழகிகள் ஸ்தானத்தில் தெலுங்கு மலையாள, கன்னட மொழிகளும், வாலிபன் ஸ்தானத்தில் மாணவர்களும், நிற்கும்போது தரகன் ஸ்தானத்தில் நம் அன்புக்குரிய அவிநாசியர் அறிந்தோ-அறியாமலோ நின்றுகொண்டிருக்கிறார் என்பதை அவரே ஆட்சேபிக்கமுடியாது. இப்போது புரிகிறதா இந்தி இஷ்டமா? கட்டாயமா? என்று!

இஷ்டமாகத்தானிருக்கட்டுமே.....இந்தி இந்த நாட்டுக்கு ஏற்றதுதானு? இந்தியிலே இலக்கியவளமுண்டா? மணி மேகலையுண்டா? குண்டலகேசியுண்டா? சிலப்பதிகாரமுண்டா? சிவகசிந்தாமணியைக் காட்டமுடியுமா? சிங்கத் தமிழரின் திறன் விளக்கும் புறநானூறைப்பார்க்க முடியுமா? காதல் கீதம் பாடும் "அக"த்தை இந்தி அறியுமா? கண்ணகி இல்லையே அங்கு! கனகவிசயன் தலை நெறித்த சேரன் செங்குட்டுவனில்லையே! நட்புக்கு இலக்கணம் சேர்த்த பிசிராந்தையும்—நாட்டுக்கு இலக்கியம் தந்த இளங்கோவும் இல்லையே! ஓடி வந்த இந்திப் பெண்ணே! உன்னிடத்தில் கடையேழு வள்ளல்கள் இல்லையேடி கள்ளி! குறள் இல்லையடி குடிகேடி! அதோபாரடி கயல், வில், புலிகொடி மூன்றினுல் கடல் கடந்தவளடி எங்கள் தாய்! என நாம் பெருமிதங்கொள்கிறோம். பீடு நடை போட்டு பேசுகிறோம். போர் நடுவே அதைநினைத்து மகிழ்கிறோம். சிறப்பெலாம் பெற்ற செந்தமிழ்த் தாயைக்காக்க போர் முனையில் நிற்கிறோம் எனப் பெருமையடைகிறோம், வள்ளுவனிடத்தில் விளையாடிய தமிழ்—ஔவையிடத்தில்

ஆத்திசூடியாய் சிரித்த தமிழ்—பாரதி. நெஞ்சில் நர்த்தனமாடி—பாரதிதாசனின் இதயக்குமுறலாய் கிளம்பிய தமிழ்—ஒரு தமிழ் அமைச்சரால் அதுவும் தமிழர்கள் சாகாமல் இருக்கும்போது சீர்குலைக்கப்படுவதென்றுல் அதைப்பார்த்துக்கொண்டிருக்க நாம் என்ன சோதாக்களா? அல்லது சோற்றுலடித்த பிண்டங்களா?

இந்திய உபகண்டத்தை ஒரு தேசமென ஒப்புக்கொண்டு, இதற்கு ஒரு பொது மொழி தேவையென்றுல் அந்த மொழி இந்தியாக இருக்கவும் அதற்கு அருகதையில்லை.

மதவாடை வீசாத மலராம் திருக்குரானைத் தன்னகத்தே கொண்ட தமிழ்மொழிதான் பொது மொழியாக இருக்க தகுதியுடையது. ஆரியக்கலாச்சாரப் படையெடுப்புக்கு அணைபோட அதுதான்வழி. ஆளவந்தார்க்கு அதைச் செய்யும் துணிவு இல்லையே! ஏன்? அமுதமிருக்க நஞ்சு தேடுகிறூர்களே ஏன்?

இந்தி ஆதரிப்புக்கூட்டம் நடத்தும் தேசியத்திராவிடரே! வந்தேமாதர கோஷத்தால் உங்கள் காதுகள் செவிடுபடாமலிருந்தால்.....ஜெய்ஹிந்த் கூச்சலால் உங்கள் கர்ணபேரிகை கிழிபடாமலிருந்தால்..... நான் சொல்வதைக் கேட்காவிட்டாலும்.....உங்கள் தலைவர்கள் கூறியதைக்கேளுங்கள். மகாத்மாகாந்தி இந்தியப் பொது மொழியாக இந்துஸ்தானிதான் வேண்டுமென்றூர். இந்தியல்ல!

ஒரு பாஷையை வலியுறுத்தி புகுத்தக்கூடாது என்றூர் பண்டித ஜவகர்.

மத்திய சர்க்காரிலேயே இத்தேசத்துப் பொதுமொழி இந்தியா? இந்துஸ்தானியா? என்று தீர்மானிக்கப்படவில்லை.

தமிழ் வாழ்க.....என்று வாயளவில் முழக்கி..... அழுத்தந்திருத்தமாக "ஜெய்ஹிந்த்" உச்சரிக்கும் போலித் தமிழ் பக்தர்களே!.....இப்போது சொல்லுங்கள்

மகாத்மர் எண்ணப்படி—ஜவகர் கருத்துப்படி..... இந்நாட்டுக்கு தேவையானது இத்துஸ்தானியா? அல்லது இந்தியா?.....

இத்தனை விளக்கங்கள்கூறி—விரிவுரைகள் பல ஆற்றி—நாங்கள் போர் ஆரம்பித்துங்கூட "காங்கிரஸ் எதைச்செய்தாலும் அதை எதிர்ப்பவர்கள் இவர்கள்" என்று திமிர்வாதம் பேசிவிட்டால் தெளிவு பிறந்து விடுமா?

காங்கிரஸ் திட்டங்களையெல்லாம் நாங்கள் எதிர்த்து வந்திருக்கிறோமா? நல்லவைகளை நாங்கள் பாராட்டிய தில்லையா?.....பாஷாணங்களைக்கும் பாம்புகள் நெளியும் சோலையிலே.....பச்சைக்கிளிகளும் பறக்குமென்பது எங்கட்குத்தெரியும். பச்சைக்கிளிகளிடம் இச்சையும்—நச்சரவுகளிடம் நாசநினைப்பும் கொண்டவர்கள் தான் நாங்கள். பாம்புப்புற்றுகளை அழிக்கும்போது..... சோலையின் சொந்தக்காரன், அழிப்பவனை சோலைக்கே எதிரி—என்று கூறினால் அறிவுடமையாகுமா?

ஆலயப்பிரவேச திட்டம் வந்தது.....வரவேற்றோம். ஆதியில் நாம் கூறியது, நம் கண்ணெதிரே நம் மாற்றுக் கட்சியினரால் நடைபெறுவது கண்டுகளித்தோம். அதிலுள்ள குறைபாடுகளையும் எடுத்துரைத்தோம். திருத்தங்கள் தந்தோம். எதிர்ப்புப் பிரசாரம் செய்தோமா? சனாதனிகளுடன் சேர்ந்து மாநாடு கூட்டினோமா?

மதுவிலக்கு வந்தது மகிழ்ச்சியடைந்தோம். ஒரு சில கதர் சட்டைகளிலேதான் சில இடங்களில்—கள் நாற்றம் அடித்ததே தவிர.....எங்கள் கழகக் கட்டிடங்களை நாங்கள் சாராயங் காய்ச்சும் தொழிற் சாலைகளாக ஆக்கிக்கொள்ளவில்லை. மதுவிலக்கு வெற்றிபெறவைத்துக் கூறினோம். குடியர்களோடுகூடி "கள் வாழ்க" என்று கத்தவில்லை.

ஜமீன்தார் ஒழிப்பு சட்டமாக்கப்படுவதை அவசரப்படுத்தினோமே தவிர.....ஆகா! ஜமீன்கள் சாய்ந்து விடுவதா? ஜாகைத்தோப்பிகள் கழன்றுவிடுவதா? என்று ஒப்பாரி வைக்கவில்லையே? ஜமீன்தாரல்லாதார்

மாநாடு நடத்தி அன்றைக்கே ஜமீன் ஒழிப்புத் தீர்மானங் கொண்டுவந்த எங்கள் வெகு நாளைய எண்ணம் வெற்றிப் பாதையில் கால்வைப்பது கண்டு களித்தோமே தவிர..... கண்ணீர்விடவில்லையே!

ஜமீனோடு.....இனம்! இனம்களோடு தங்கக் கவசலிங்கம்! பொன் ஓடு பொன்னம்பலத்தான்! மாணிக்க மூக்குத்திக்காரி மதுரை மீனாட்சி! வைரக்கிரீடவெங்கடத்தான்! சொர்ணத் தியாகராசப்பெம்மான்! இவர்களையும் சேர்த்து ஒழியுங்கள் என்று திருத்தம் தந்தோமே தவிர திட்டத்தை எதிர்த்தோமா?

இப்போதுதான் என்ன.....ஐதராபாத் பிரச்னை வந்ததும் அறப்போரின் வேகத்தை நாங்கள் குறைத்துக் கொள்ளவில்லையா?

ஓங்கிய வாட்களை உறையிலிட்டு ஓய்வு பெற்றது மட்டுமல்ல—சர்க்காருக்கு உபத்திரவம் கொடுக்காமலும் நாங்கள் ஒதுங்கியிருக்கவில்லையா? இதுதான் சமய மென்று நாங்கள் தண்டவாளங்களை தகர்க்க ஆரம்பித் திருந்தால்—தபாலாபீசுகளைத் தகனம் செய்யத் துவங்கி யிருந்தால்—தீவட்டியுங் கையுமாக சர்க்கார் நிலையங்களை வட்டமிட்டிருந்தால்—ஏன்? ஐதராபாத் நிஜாமுடன் ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்திருந்தால் மீண்டும் போர் நாள் குறிக்க ஈரோடு மாநாடு நடந்திருக்காதே. திராவிடஸ்தான் சுதந்திர விழாகொண்டாட அல்லவா ஈரோட்டில் நாள் குறித்திருப்போம்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும், வீரமும், விவேகமும் பொருந்திய ஒரு தலைவரைப் பெற்றிருக்கிற நாங்கள் வீணர்களல்லவே! வேண்டுமென்று ஒருபோரை விலைக்கு வாங்க, வேலையற்றவர்களல்லவே!

படகிலே இடங்கேட்ட பார்ப்பன பிரமச்சாரி காலும் கையும் கட்டப்பட்டிருந்த காரணத்தால்—தடப்பக்குச் சிலை பல்லால் இழுத்து குறங்கின் பின்புறத்தில் குத்த குரங்கு அங்கிருந்த பாம்பாட்டியின் பெட்டியில்பாய—பெட்டி திறந்து, அங்கே நாகங்கள் சிற—நாகங்கண்டு நடுங்கிய பிரயாணிகள் அங்குமிங்கும் ஓட—நட்டாற்றில்

படகு கவிழ்ந்த கதைபோல நமது கல்வி மந்திரி அவிநாசியார்—அதிகாரம் என்ற குச்சியால் இந்திக் குரங்கில் குத்தி, அது தான் பிழைக்க அடக்குமுறையென்னும் பாம்புப்பெட்டியில் தாவி, அடக்குமுறை அரவங்கண்ட தமிழர் அச்சங்கொண்டு ஓடி.....ஆட்சிப் படகு கட்டாற்றில் அமிழ்ந்துவிடும் நிலையை சிருஷ்டித்துவிட்டார். கதையில் வருபவனும் பிரமச்சாரி. கல்விமந்திரியும் பிரமச்சாரி. கேட்கவேண்டுமா விளைவை?

எங்களை ஏளனம் புரிபவர்—எங்கள் கொள்கைகளின் அங்கங்களை ஒத்திட்டுப்பாராதவர்—விளக்கம் தெரிந்து கொள்ள விரும்பாதவர்—வேதாரத்தினமே இந்த தேசம் என எண்ணுபவர், போராட்டத்தில் பெருக்கெடுக்கும் எங்கள் ரத்த ஓடைகளைக் கண்டபிறகாவது அவர்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்க்கட்டும். ஆகஸ்ட் பத்துக்குப் பிறகு நாங்கள் பட்ட அல்லல்களை எண்ணிப்பார்த்து எங்கள்மேல் இரக்கப்படட்டும்.

தமிழ்காக்கவந்த தோழியர் தலைச்சுமியை மூப்பதுமைலுக்கப்பால் தன்னந்தனியாய்க் கொண்டுபோய் விட்டார்கள்; வெள்ளையனின் கொடுங்கோலை வெறுத்தவர்கள் இந்த வேதனையை விளையாட்டாகக் கருதினர்கள்.

எட்டுமாத கர்ப்பவதி, வயிற்றிலே சிசு துடிக்கத் துடிக்க, தள்ளாடி நடக்கும் தன் நாலுவயதுக் குழந்தை "அய்யோ அம்மா பசி" என அலற, மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தாள் கருகிய மொட்டென ஒரு மழலை—சூரியனின் கனல் தாங்காத அதன் தாய்—இந்தப் பரிதாபப்படலத்தை அங்குள்ள மரங்கள் கண்டிருந்தால்—அந்த மரங்களுக்கு பேச வாயிருந்தால்—"சீ! இதுதானு சுயராஜ்யம்!" எனக் கூறி சிரித்திருக்கும். அந்தச் சிரிப்பின் ஒலியிலேயே.....அக்கிரமங்களின் அஸ்திவாரம் அசைக்கப்பட்டிருக்கும். அகிம்சா வீரர்களின் ஆட்சியிலே இந்த அக்கிரமம் நடைபெறலாமா என நாடு கேட்கிறது. நாட்டுமக்கள் கேட்கிறார்கள். கேட்பது மட்டுமல்ல சிரிக்கிறார்கள். இப்படி சிரிப்பாய் சிரிக்கத்தானு—காந்தியார் கஷ்டப்பட்டார் என்று திரு. வி. க. அழுவதும், அதைக்காதில் போட்டுக்கொள்ளாமல் காமராஜர் சுப்பரா

யன் கோஷ்டி 'காரைக்கால்'—மாகிகளை நம் ஆதிக்கத்தில் கொண்டுவர வேண்டு' மென கர்ச்சிப்பதும் நம் காதில் ஒலிக்கிறது.

இரும்பு நெஞ்சன் இட்லரும்—மூர்க்கன் முசோலினிவும் பாசிசத்தை இந்த பாரதபுத்திரர்களிடம் தான் கற்றுக்கொண்டார்களோ என்று சந்தேகிக்கிற அளவுக்கு சங்கடங்கள். நாங்கள் கஷ்ட நஷ்டங்களை கருதிப்பார்த்துத்தான் போரில் இறங்கினோம் எங்கள் ஈட்டிகளின் கூர்மையிலே—கேடயத்தின் வலுவிலே—நெஞ்சு உறுதியிலே சந்தேகமில்லையென்று தெளிந்த பிறகே தலைவர் ஆணை கிடைத்தது எங்களுக்கு. போரை விரும்பமாட்டோம்: போர் முனையில் வந்துவிட்டால் புறமுதுகிடும் வழக்கம் தமிழ்உணர்ச்சிபெற்ற எங்களுக்கு கிடையாது. இதைவிடக் கடுமையான கொடுமைகள் எங்களை அணுக இருக்கின்றன. அடக்குமுறையின் அகோர வாய் எங்களைப்பார்த்து பிளந்தபடியிருக்கிறது. அதிகாரம் தன் இரத்தநாக்குகளை நீட்டியபடி எங்களை மோப்பம் பிடிக்கிறது. சட்டத்தின் விஷப்பற்களுக் கிடையே நாங்கள் நிறுத்தப்பட்டிருக்கிறோம். இன்று உங்களிடையே உலவுகிறநாங்கள் நாளை தூக்குமேடையில் ஊசலாடலாம். பலிபீடத்தில் தலையிழந்த முண்ட மாகக்கிடக்கலாம். சமாதிகளாய் அமைந்துவிடலாம். சிறைச்சாலையில் சித்ரவதைக்கு ஆளாகலாம்.

ஏன்.....எங்கள் தலைவர் பெரியார் ராமசாமி நாளை சென்னை கடற்கரையிலே பேருரையாற்ற வரலாம் பெரியார் பேச்சுக்கு 144 தடைபோடப்படலாம். பெரியார் தடையை மீறி பேசுவதற்காக மேடையில் ஏறும் சமயம் போலீசாரால் கைது செய்யப்படலாம். தமிழகத்தின் தலைவன் தன்மானக்காவலன்—தள்ளாத வயதிலே தமிழ் காக்கும் பெரியோன்—பொன்னிற மேனியும் வெண்ணிற தாடியுங்கொண்ட புரட்சிச் சிம்மம்—திராவிடத்தின் தந்தை—ஆ! எங்கள் முடிசூடா மன்னனுக்கா சிறைச் சாலை எனச் சிறியெழலாம் சென்னைப் பொதுமக்கள். பொது மக்கள் பொங்கும் கடலானது கண்டு, போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகித்தும் பயன் காணுமல் கடை

சியாக துப்பாக்கியைத் தூக்கலாம். பட படவென குண்டு கள் வெடிக்கையிலே திசை கெட்டுத் திண்டாடி மக்கள் ஓட.....அவசரத்தில் அந்த அமளியில்.....ஒரு குண்டு பெரியார் ராமசாமியின் மார்பிலே பாயலாம். பெரியார் பிணமாக விழலாம். அலங்கோலமாய் ஓடுகின்ற மக்கள் மேலே சாய்ந்து கிடப்பது பெரியாரின் சவம் என்பது தெரி யாமல் அவர் மார்பிலே கால் வைத்து ஓடலாம். அய்யகோ! இந்தக் கண்ராவியான காட்சியை நம் கண்க ளாலேயே காணலாம். இதையும், நாங்கள் படமாக்கிப் பார்த்து, மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டுதான் போர் முரசு கொட்டியிருக்கிறோம்.

எங்களுக்கு எவ்வளவு தொல்லை இந்த நாட்டில், லட்சக்கணக்கான வீரர்கள் கூடுகிற மகாநாட்டு செய்தி களை பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. காரசாரமான இந்தி எதிர்ப்பு செய்திகளிலே கத்தரிக்கோல் வேலை நடத்துகிறார்கள் தேசிய ஆசிரியர்கள். சென்னையிலே எங் கள் சங்கநாதம—திருச்சியிலே எங்கள் திராவிடப் பட்டா ளம்—இந்த எழுச்சிமிகு நிகழ்ச்சிகள் வானொலியில் வரு வதேயில்லை. பண்டிதரோருஜி படுத்துப் புரண்டதும்—பட் டேல்துரை பல்விளக்கியதும் பத்திரிகையிலே கொட்டை யெழுத்துச் செய்திகள். பாரதிதாசனுக்கு பரிசளிப்பு விழா. பதினாயிரக் கணக்கில் மக்கள் கூடினர் என்பது பத்திரிகையிலே எங்கோ ஓர் மூலையில்! ஆவணி அவிட் டம் பூணூல் போட்டுக் கொண்டதற்கு ஒரு நிகழ்ச்சி அகில இந்திய ரேடியோவில்! அண்ணா தலைமையில் ஈரோடு மகாநாடு, அதனை ஒலிபரப்ப மாத்திரம் வரை யாகிறது ரேடியோ. இந்த குட்டை மனப் பான்மைக் கெல்லாம் பரிகாரம் தேடவேண்டாமா.

வெள்ளை ஏகாதிபத்யத்தை எதிர்த்தவர்கள் வடவர் ஏகாதிபத்தியத்துக்கு வாழ்த்து கூறுவதை நாம் அனு மதிக்க முடியுமா?

மதுவிலக்குக்குப் பணமில்லை—ஜமீன் ஒழிப்புக்கு உதவியில்லை—ராஷ்டிரபதி தேர்தலில் பட்டாபிக்கு ஆதரவு தரமாட்டோம் என்ற அளவுக்குப் பேதங்காட் டிய வடநாட்டுத் தலைமை பீடத்தை இன்னும் தலையில்

தூக்கி வைத்திருப்பதை நாங்கள் எதிர்ப்பது தவறு? திராவிடத்தை வியாபார மார்க்கெட் ஆக்கிக்கொண்ட மார்வாடி பனியாக்கொள்கையை நாங்கள் மறுப்பது தவறு? சமுதாயத்தை சருக்கு நிலமாக்கிய ஜாதி வெறியரை நாங்கள் சாய்க்க நினைப்பது தவறு? கட்டாய இந்தியை நுழைத்து மாணவரைக் கெடுக்காதீர் எனக் கூறுவது தவறு? இதற்காக நடைபெறும் எங்கள் பிரச்சாரங்களை சர்க்கார் தடுத்தால் அந்த சர்க்காரை எதிர்ப்பதுதான் தவறு? பிரஜா உரிமைக்காக போராடியவரே! எழுத்துரிமை கேட்ட எனதன்பரே! இதிலே எது தவறு?

இந்தப்போர் மொழிப்போர் மட்டுமல்ல. இது இன உரிமைப்போர். எகாதிபத்திய எதிர்ப்புப்போர். பார்ப்பனீய பனியா ஒழிப்புப்போர். இதில் வெற்றி தோல்வி எந்தப்பக்கம் தாவினாலும் கவலையில்லை.

மானத்தை காப்பாற்ற ஒரு போர் நடந்தது என்பது மட்டும் சரித்திரத்தில் இடம் பெற்றால் போதும். வருங்கால சந்ததிக்கு அந்த வரிகள் வேல்களாகும். படை முழுகமாகும்.

திராவிடப் பெருங்குடி மக்களே! நடராசன் தாலமுத்து கல்லறைகளைக் காட்டி—நாயர், தியாகர் பணிகளை நினைவுபடுத்தி—வேலாயுதத்தின் பிணத்தை எதிர் நிறுத்தி உங்களை வேண்டுகிறோம் எங்களுக்கு ஆதரவு தாருங்கள். ஆதரவு தர முடியாவிட்டாலும் ஆசி கூறி அனுப்புங்கள் அறப்போருக்கு! உங்களிடம் நாங்கள் கோருவதெல்லாம் .....நாங்கள் அத்தனைபேரும் செத்து மடிந்துவிட்டால் தயவு செய்து எங்கள் எல்லோருக்குமாக சேர்த்து ஒரு சமாதி கட்டி வையுங்கள். அந்தச் சமாதி, எதிர்காலத்திலே ஓமந்தூரார் பேரனின் கண்ணீரால் நனையட்டும் என்பதற்காக! வேதரத்தினத்தின் வம்சம் அங்கு நின்று விழிகளில் நீர் பெருக்கும் என்பதற்காக அந்தக் கண்ணீர் எங்களையும்—நாங்கள் எதற்காக செத்துப்போனோமோ அத்த குறிக்கோளையும் நினைவுபடுத்தும் என்பதற்காக இந்தக்கடைசி கோரிக்கையை சமர்ப்பிக்கிறோம் நாங்கள் மாளுவதற்குத் தீர்மானித்து களம்புகு நேரத்தில்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எழுதிவைக்கும் உயில்; சுயமரியாதை சொத்தைக் காப்பதும் திராவிட நாட்டாட்சியை வசப் படுத்துவது என்பதும்தான்.

திராவிட வாலிபரே! வனிதையரே! மானம் காக்கும் எண் ணம், மரக்குடியில் பிறந்த பண்பு, இவைகள் நம்மிடை இருப்பது உண்மையானால் வீட்டுக் கொருவர் கிளம்புங்கள். ஓராயிரம் ஈராயிரம் ஆண்டுகளாய் வளர்ந்துவரும் அநீதியை ஒரு கை பார்த்து விடுவோம்.

ஆட்சியாளரே! நீங்கள் அடக்குமுறையை அள்ளி எறியுங் கள் எம்மேல்! ஆனால், அடக்குமுறை வெற்றியைத் தருமா என் பதை இரத்தம் சிந்திய திருப்பூர் குமரனைக் கேளுங்கள். சிறையில் வாடிய வ. உ. சிதம்பரத்தைக் கேளுங்கள். தூக்கில் தொங்கிய பகவத்சிங்கைக் கேளுங்கள். அவர்களுடைய பதிலைக் கண்ட பிறகும் அடக்குமுறையில் உங்கட்கு நம்பிக்கை யிருக் குமானால் அந்த ஆயுதத்தைச் சுழற்றுங்கள். போலீசார் போத வில்லை என்றால்.....திராவிட இனத்து விபீஷணர் குண்டர்களை ஏவுங்கள்; அதிலும் முடியாவிட்டால் பண்ணைக்காரரின் ஆட்கள் நிறையக் கிடைப்பார்கள்; எம்மீது பாயவிடுங்கள். பட்டாளத் தையே வரவழையுங்கள். எதற்கும் பின்னடைபவர்களல்ல நாங் கள். இயேசுக்கு சிலுவையும், முகம்மது நபிக்கு கல்லடியும், சாக்ரடீசுக்கு நஞ்சும், காந்தியாருக்கு துப்பாக்கி குண்டுகளும் பரிசாகத் தரப்பட்ட பயங்கர வரலாறுகளைப் படித்துப் பார்த்துத் தான் நாங்கள் அறப்போர் தொடுத்திருக்கிறோம்.

உம்.....நடக்கட்டும் உங்கள் அடக்குமுறை. எங்கே உங்கள் அதிகார அஸ்திரங்கள்? இதோ எங்கள் நிமிர்ந்த நெஞ்சு. வீசுங் கள். கண்டபடி வீசுங்கள், கை, கால், கண், காது, மூக்கு, முகம் எல்லாம் மூளியாகட்டும். மூளையே சிதறித் தெரித்தாலும் முதுகைக் காட்டிவிடும் சோதாக்களாகி விடமாட்டோம். இதை மறந்துவிடாதீர்கள்.

இது "தேவாசுர" யுத்தம். ஆம்.....இராமாயணப் போர். இந்தப் போரில் நிச்சயமாக வெற்றி இராவணனுக்குத்தான்! இராமனுக்கு அல்ல! ராஜ்யம் விபீஷணனுக்குமல்ல!

இதுவே எமது அறப்போரின் இறுதிப் பிரகடனம்.

‘பெரியார்’ இராமசாமி

(தொகுப்பு நூல்)

விலை 1 12 ப

அறிஞர் அண்ணாவின்

எழுத்தோவியம்

1858 - 1948

விலை 1 0 0

மு. கருணாநிதி

‘சங்கிலிச் சாமி’

விலை அணா எட்டு

கம்பரும் வம்பரும்

(நேடுஞ்செழியன் ஜனார்த்தனம்)

விலை அணா நான்கு

அறிவுப் பண்ணை

நெ. 6, மங்கம்மாள் தெரு, சென்னை - 1.

* புதிய நூல்கள் *

மூலபலம் முறிகிறது	(அண்ணா)	0	8	0
வாழ்க்கைப் புயல்	,,	0	12	0
இராம இராச்சியம்	(கைவல்யம்)	0	10	0
கருஞ்சட்டைப் படை		0	3	0
உலகம் கண்ட திராவிடம்		0	2	0

விற்பனைக் கழிவு 20 பர்சன்ட்

அறிஞர் அண்ணாதுரை	(தொகுப்பு நூல்)	1	4	0
பெரியார் இராமசாமி	,,	1	12	0
பலிபீடம் நோக்கி	(மு. கருணாநிதி)	0	6	0
கதம்பம்	(தில்லை வில்லாளன்)	0	8	0
கழுதை ஊர்வலம்	,,	0	8	0
புரோகிதன் முன்னேற்றம்		0	3	0
நடிகவேள் எம். ஆர். ராதா		0	3	0
பெரியார் மணிமொழிகள்		0	3	0
அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி		0	8	0
முதலாளி ஒழிக	(பெரியார்)	0	6	0
மதித்தலைவர் பெரியார் (மடத்தலைவருக்கு மறுப்பு)		0	4	0
இந்தி மறுப்புப் பாடல்கள்		0	2	0

விற்பனைக் கழிவு 25 பர்சன்ட். தபால் செலவு இலும்.

*

அறிவுப் பண்ணை

6, மங்கம்மாள் தெரு,

எழுகிணறு, — சென்னை - 1.